## இனிமையான குழந்தைகளே!- அனைத்தும் கர்மத்தின் மீது தான் ஆதாரப்பட்டிருக்கிறது, தண்டனை அனுபவிக்கும் படியாக மாயைக்கு வசப்பட்டு தலைகீழான கர்மம் எதுவும் செய்து விடாதபடி எப்போதும் கவனம் இருக்க வேண்டும்.

கேள்வி: பாபாவின் பார்வையில் அனைவரையும் விட புத்திசாலி யார்?

பதில்: யாரிடத்தில் தூய்மையின் தாரணை இருக்கிறதோ அவர்கள் தான் புத்திசாலி, மற்றும் யார் தூய்மை யற்றவர்களாக இருக்கிறார்களோ அவர்கள் புத்தியில்லாதவர்களாவர். லஷ்மி- நாராயணனைத் தான் அனைவரிலும் புத்திசாலி என்று சொல்ல முடியும். குழந்தைகளாகிய நீங்கள் இப்போது புத்திசாலிகளாக ஆகிக்கொண்டிருக்கிறீர்கள். தூய்மை தான் அனைத்திலும் முக்கியமாகும் ஆகையினால் பாபா எச்சரிக்கின்றார் - குழந்தைகளே, இந்த கண்கள் ஏமாற்றி விடக் கூடாது, இவற்றி டமிருந்து பாதுகாப்பாக (தன் வசத்தில் வைத்து) இருக்க வேண்டும். இந்த பழைய உலகத்தை பார்த்துக் கொண்டிருந்தாலும் கூட பார்க்காமல் இருங்கள். புதிய உலகம் சொர்க்கத்தை நினைவு செய்யுங்கள்.

ஓம் சாந்தி. இந்த பழைய உலகத்தில் நாம் இன்னும் கொஞ்ச நாள் வழிபோக்கர்களாக (பிரயாணி யாக) இருக்கின்றோம் என்பதை இனிமையிலும் இனிமையான செல்லக் குழந்தைகள் புரிந்துள்ளீர் கள். உலகத்திலுள்ள மனிதர்கள் இன்னும் 40 ஆயிரம் ஆண்டுகள் இங்கே இருக்க வேண்டும் என்று புரிந்து கொண்டிருக்கிறார்கள். குழந்தைகளாகிய உங்களுக்கு நிச்சயம் இருக்கிறது அல்லவா. இந்த விசயங்களை மறக்கக் கூடாது. இங்கே அமர்ந்திருந்தாலும் குழந்தைகளாகிய உங்களுக்கு அதிக மகிழ்ச்சி இருக்க வேண்டும். இந்த கண்களின் மூலம் எதையெல்லாம் பார்க்கின்றீர்களோ அவை யெல்லாம் அழியப்போகிறது. ஆத்மா அழிவற்றதாகும். ஆத்மாக்களாகிய நாம் 84 பிறவிகள் எடுத்திருக்கிறோம். இப்போது பாபா வீட்டிற்கு அழைத்துச் செல்ல வந்திருக்கின்றார். பழைய உலகம் முடியும்போது புதிய உலகத்தை உருவாக்குவதற்கு பாபா வருகின்றார், பழைய உலகத்திலிருந்து எப்படி புதியதாக ஆகின்றது என்பது உங்களுடைய புத்தியில் இருக்கிறது. நாம் அனேக முறை சக்கரத்தைச் சுற்றியிருக்கிறோம். இப்போது சக்கரம் முடிகிறது. புதிய உலகத்தில் நாம் குறைவான தேவதைகளே இருப்போம். மனிதர்கள் இருக்க மாட்டார்கள். மற்றபடி அனைத்தும் கர்மத்தில் (நம் செயல்பாடுகளில்) ஆதாரப்பட்டிருக்கிறது. மனிதர்கள் தலைகீழான கர்மங்கள் செய்கிறார்கள் என்றால் கண்டிப்பாக அதன் கணக்கு இருக்கிறது ஆகையினால் இந்த பிறவியில் அப்படிப்பட்ட பாவ கர்மம் எதுவும் செய்யவில்லை தானே என்று பாபா கேட்கின்றார்? இது தூய்மையற்ற மோசமான இராவண இராஜ்யமாகும். இது இருண்ட உலகமாகும். இப்போது பாபா குழந்தைகளாகிய உங்களுக்கு ஆஸ்தியை கொடுத்துக் கொண்டிருக்கின்றார் நீங்கள் இப்போது பக்தி செய்வதில்லை. பக்தி எனும் இருளில் ஏமாற்றம் அடைந்து வந்துள்ளீர்கள். இப்போது பாபாவினுடைய கை கிடைத்திருக்கிறது. பாபாவின் துணை இல்லாமல் நீங்கள் விஷ வைத்தரினீய நதியில் மூழ்கி இருந்தீர்கள். அரைக் கல்பம் பக்தியே ஆகும், ஞானம் கிடைப்பதின் மூலம் நீங்கள் சத்யுக புதிய

உலகத்திற்கு செல் கின்றீர்கள். இப்போது இது புருஷோத்தம சங்கமயுகமாகும், இப்போது நீங்கள் தூய்மையற்ற மோசமான நிலையிலிருந்து மலராக, முட்களிலிருந்து மலராக ஆகிக் கொண்டிருக்கிறீர்கள். இப்படி மாற்றுவது யார்? எல்லையற்ற தந்தை. லௌகீக தந்தையை எல்லையற்ற தந்தை என்று சொல்ல முடியாது. நீங்கள் பிரம்மா மற்றும் விஷ்ணுவினுடைய தொழிலையும் தெரிந்து கொண்டீர்கள். எனவே உங்களுக்கு எவ்வளவு தூய போதை இருக்க வேண்டும். மூலவதனம், சூட்சுமவதனம், ஸ்தூலவதனம்........ இவையனைத்தும் சங்கமயுகத்தில் தான் இருக்கிறது. பாபா வந்து இப்போது குழந்தைகளாகிய உங்களுக்குப் புரிய வைக்கின்றார், இது பழைய மற்றும் புதிய உலகத்தின் சங்கமயுகமாகும். தூய்மையற்றவர்களை தூய்மையாக்க வாருங்கள் என்று தான் அழைக்கிறார்கள். பாபாவினுடைய நடிப்பும் கூட இந்த சங்கமயுகத்தில் நடக்கிறது. படைப்பவர், இயக்குபவர் அல்லவா. எனவே கண்டிப்பாக அவருடைய செயல் ஏதாவது இருக்கும் அல்லவா! அவரை மனிதன் என்று சொல்ல முடியாது, அவருக்கு தன்னுடைய சரீரமே இல்லை என்பதை அனைவரும் தெரிந்துள்ளார்கள். மற்ற அனைவரையும் மனிதன் அல்லது தேவதை என்று சொல்லலாம். சிவ பாபாவை தேவதை என்றோ, மனிதன் என்றோ சொல்ல முடியாது. தற்காலிகமாக இந்த சரீரத்தை கடனாகப் பெற்றிருக்கிறார். கர்பத்திலிருந்து பிறந்தாரா என்ன. பாபா அவரே கூறுகின்றார் - குழந்தைகளே, சரீரமில்லாமல் எப்படி இராஜயோகத்தை கற்றுக் கொடுப்பேன்! கல்லிலும் முள்ளிலும் பரமாத்மா இருக்கின்றார் என்று மனிதர்கள் சொல்லி விட்டார்கள் ஆனால் நான் எப்படி வருகின்றேன் என்பதை குழந்தைகளாகிய நீங்கள் புரிந்து கொள்கிறீர்கள். இப்போது நீங்கள் இராஜ யோகம் கற்றுக் கொண்டிருக்கிறீர்கள். மனிதர்கள் யாரும் கற்றுக் கொடுக்க முடியாது. தேவதைகள் இராஜயோகத்தை கற்றுக்கொள்ள முடியாது. இங்கே இந்த புருஷோத்தம சங்கமயுகத்தில் இராஜயோகத்தை கற்றுக் கொண்டு தான் தேவதையாக ஆகிறார்கள்.

நாம் இப்போது 84 பிறவிகளை முடித்துள்ளோம் என்று குழந்தைகளாகிய உங்களுக்கு இப்போது அளவற்ற குஷி இருக்க வேண்டும். பாபா கல்பம்-கல்பமாக வருகின்றார், பாபா அவரே கூறுகின்றார், இது நிறைய பிறவி களின் கடைசி பிறவியாகும். ஸ்ரீகிருஷ்ணர் சத்யுகத்தின் இளவரசராக இருந்தார். பிறகு அவர் தான் 84 பிறவி களின் சக்கரத்தில் சுற்றுகின்றார். சிவபாபா 84 பிறவிகளின் சக்கரத்தில் வர மாட்டார். ஸ்ரீகிருஷ்ணருடைய ஆத்மா தான் அழகாக இருந்து பிறகு கருமையாக ஆகிறது, இந்த விஷயங்கள் யாருக்கும் தெரியவில்லை. உங்களில் கூட வரிசைக்கிரமமாகத் தான் தெரிந்துள்ளீர்கள். மாயை மிகவும் கடுமையானதாகும். யாரையும் விடுவதில்லை. பாபாவிற்கு அனைத்தும் தெரிகிறது. மாயை எனும் முதலை ஒரேயடியாக விழுங்கி விடுகிறது. இதை பாபா நல்ல விதத்தில் தெரிந்துள்ளார். பாபா அனைவருக்குள்ளும் இருப்பதை தெரிந்தவர் என்று புரிந்து கொள்ளாதீர்கள். கிடையாது, பாபா அனைவருடைய நடத்தைகளையும் தெரிந்துள்ளார். செய்திகள் வருகிறது அல்லவா. மாயை ஒரேயடியாக பச்சையாக வயிற்றில் போட்டுக் கொள்கிறது. இப்படி நிறைய விஷயங்கள் குழந்தைகளாகிய உங்களுக்குத் தெரிவதில்லை. பாபாவிற்கு அனைத்தும் தெரி கிறது. மிகவும் மோசமான நடத்தை யுடையவர்களாக இருக்கிறார்கள் ஆகையினால் தான் பாபா அடிக்கடி எச்சரிக்கின்றார். மாயையிடம் எச்சரிக்கையாக இருக்க

வேண்டும். பாபா புரிய வைத்தாலும் கூட புத்தியில் நிற்பதில்லை, காமம் மிகப்பெரிய எதிரி, நாம் விகாரத்தில் செல்கிறோம் என்பது கூட தெரிவதில்லை, இப்படியும் நடக்கிறது, ஆகையினால் பாபா கூறுகின்றார் ஏதாவது தவறு நடந்தது என்றால் தெளிவாகச் சொல்லி விடுங்கள், மறைக்காதீர்கள். இல்லையென்றால் நூறு மடங்கு பாவமாகிவிடும். அது உள்ளுக்குள் அரித்துக் கொண்டே இருக்கும். வளர்ந்து கொண்டே இருக்கும். ஒரேயடியாக விழுந்து விடுவீர்கள். குழந்தைகள் தந்தையிடத்தில் முற்றிலும் உண்மை யானவர்களாக இருக்க வேண்டும் இல்லையென்றால் மிக அதிக நஷ்டமாகிவிடும். இது இராவணனுடைய உலகமாகும். இராவணனுடைய உலகத்தை நாம் ஏன் நினைவு செய்ய வேண்டும். நாம் புதிய உலகத்திற்குச் செல்ல வேண்டும். தந்தை புதிய வீடு கட்டுகிறார் என்றால், குழந்தைகள் நமக்காக புதிய வீடு உருவாகிக் கொண்டிருக்கிறது என்று புரிந்து கொள்வார்கள். குஷி இருக்கிறது. இது எல்லையற்ற விசயமாகும். நமக்காக புதிய உலகம் சொர்க்கம் உருவாகிக் கொண்டிருக்கிறது. இப்போது நாம் புதிய உலகத்திற்குச் செல்லப்போகிறோம் பிறகு எந்தளவிற்கு பாபாவை நினைவு செய்கிறோமோ அந்தளவிற்கு அழகானவர்களாக(மலர்களாக) ஆவோம். நாம் விகாரத்திற்கு வசப்பட்டு முட்களாக ஆகிவிட்டோம். யார் வர வில்லையோ அவர்கள் மாயைக்கு வசமாகி விட்டார்கள், பாபாவிடம் இல்லை என்பதை குழந்தைகளாகிய நீங்கள் தெரிந்துள்ளீர்கள். துரோகி களாகி விட்டார்கள். பழைய எதிரியிடம் சென்று விட்டார்கள். இப்படி நிறைய பேரை மாயை விழுங்கி விட்டது. எவ்வளவு பேர் மடிந்து விட்டார்கள். நிறைய நல்ல - நல்லவர்கள் நாங்கள் இதை செய்வோம் அதை செய்வோம் என்று சொல்லிவிட்டு சென்றுவிடு கிறார்கள். நாங்கள் யக்ஞத்திற்காக உயிரையும் கொடுக்கத் தயாராக இருக்கிறோம் என்று சொன்னவர்கள் இன்று இல்லை. உங்களுடைய சண்டையே மாயையுடனாகும். மாயையோடு சண்டை எப்படி நடக்கிறது என்பதை உலகத்தில் யாரும் தெரிந்திருக்கவில்லை. சாஸ்திரங்களில் தேவதைகளுக்கும் அசுரர் களுக்கும் சண்டை நடந்தது என்று காட்டி விட்டார்கள். பிறகு கௌரவர்களுக்கும் பாண்டவர் களுக்கும் சண்டை நடந்தது என்று காட்டி விட்டார்கள். இந்த இரண்டு விசயங்களும் சாஸ்திரங் களில் எப்படி வந்தது என்று யாரிடமாவது கேளுங்கள்? தேவதைகள் அஹிம்சையாளர்களாக இருக்கிறார்கள். அவர்கள் சத்யுகத்தில் தான் இருக்கிறார்கள். பிறகு அவர்கள் கலியுகத்தில் சண்டை போடுவதற்கு கலியுகத்திற்கு வருவார்களா என்ன? கௌரவர்கள் மற்றும் பாண்டவர்களின் அர்த்தத்தையும் புரிந்து கொள்ளவில்லை. சாஸ்திரங்களில் என்ன எழுதியிருக்கிறார்களோ அதையே படித்து விட்டு சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். பாபா கீதை முழுவதையும் படித்திருக்கிறார். இந்த ஞானம் கிடைத்த பிறகு கீதையில் இந்த சண்டை போன்றவற்றை ஏன் எழுதினார்கள் என்று சிந்தனை ஓடியது? கிருஷ்ணர் கீதையின் பகவான் இல்லை. இவருக்குள் பாபா அமர்ந்திருந்தார் எனும்போது இவர் மூலமாக அந்த கீதையையும் புத்தியி-ருந்து நீக்கிவிட்டார். இப்போது பாபாவின் மூலம் எவ்வளவு ஒளி கிடைத்திருக்கிறது. ஆத்மாவிற்குத் தான் ஒளி ஆகும் எனவே தான் பாபா கூறுகின்றார், தங்களை ஆத்மா என்று புரிந்து கொள்ளுங்கள், எல்லை யற்ற தந்தையை நினைவு செய்யுங்கள். பக்தியில் நீங்கள் நினைவு செய்தீர்கள், தாங்கள் வந்தால் தங்களுக்கு பலியாவோம் என்று சொன்னீர்கள். ஆனால் அவர் எப்படி வருவார், எப்படி பலியாவோம், என்பதை புரிந்திருந்தீர்

களா என்ன?

எப்படி தந்தையோ அதுபோல் ஆத்மாக்களாகிய நாமும் இருக்கின்றோம் என்று இப்போது குழந்தை களாகிய நீங்கள் புரிந்து கொள்கிறீர்கள். பாபாவினுடையது அலௌகீக பிறவியாகும், குழந்தை களாகிய உங்களுக்கு எவ்வளவு நல்ல விதத்தில் புரிய வைக்கின்றார். இவர் அதே நம்முடைய தந்தை தான் என்று நீங்கள் தாங்களாகவே கூறுகின்றீர்கள். இவர் கல்பம் கல்பமாக நம்முடைய தந்தையாக ஆகின்றார். நாம் அனைவரும் பாபா-பாபா என்று கூறுகின்றோம். பாபாவும் குழந்தை களே-குழந்தைகளே என்று கூறுகின்றார், அவரே தான் டீச்சர் ரூபத்தில் இராஜயோகம் கற்றுக் கொடுக்கின்றார். உங்களை உலகத்திற்கு எஜமானர்களாக்குகின்றார். எனவே அப்படிப்பட்ட தந்தை யினுடையவர்களாக ஆகி பிறகு அந்த டீச்சரிடமிருந்து படிப்பினையையும் கற்றுக் கொள்ள வேண்டும். அவரிடமிருந்து பாடத்தைக் கேட்டு-கேட்டு மன மகிழ்ச்சி அடைய வேண்டும். ஒருவேளை மோசமானவர்களாக ஆகிவிட்டீர்கள் என்றால் அந்த குஷி வரவே வராது. பிறகு எவ்வளவு தான் மண்டை உடைத்துக் கொண்டாலும் அவர் நம் இனத்தின் சகோதரரே இல்லை. இங்கே மனிதர்களுக்கு எவ்வளவு துணை பெயர்கள் இருக்கின்றன. அவையனைத்தும் எல்லைக்குட்பட்ட விசயங்களாகும். துணைப்பெயரை பாருங்கள் எவ்வளவு பெரியதாக இருக்கிறது. பெரியதிலும் பெரிய எள்ளு-கொள்ளு தாத்தா பிரம்மா. அவரை யாரும் தெரிந்திருக்கவே இல்லை. சிவபாபாவை சர்வவியாபி என்று சொல்லி விட்டார்கள். பிரம்மாவைப் பற்றியும் யாருக்கும் தெரியாது. பிரம்மா, விஷ்ணு, சங்கருடைய சித்திரம் கூட இருக்கிறது. பிறகு பிரம்மாவை சூட்சும வதனத்திற்கு கொண்டு சென்று விட்டார்கள். சரித்திரம் எதையும் தெரிந்திருக்கவில்லை. பிரம்மா சூட்சுமவதனத்தில் எங்கிருந்து வந்தார்? அங்கு எப்படி தத்தெடுப்பார். இது என்னுடைய ரதம் என்று பாபா புரிய வைத்திருக்கிறார். நிறைய பிறவிகளின் கடைசியில் நான் இவருக்குள் பிரவேசித் திருக்கிறேன். இந்த புருஷோத்தம சங்கமயுகம் கீதையின் யுகமாகும், இதில் தூய்மை மிக முக்கிய மானதாகும். தூய்மையற்ற நிலையிலிருந்து எப்படி தூய்மையாவது என்பது யாருக்குமே தெரிய வில்லை. சாது-சன்னியாசிகள் போன்ற யாரும், தேகம் உட்பட தேகத்தின் அனைத்து சம்மந்தங் களையும் மறந்து தந்தையாகிய என் ஒருவனை நினைவு செய்தீர்கள் என்றால் மாயையின் பாவ கர்மங்கள் அனைத்தும் பஸ்மமாகி விடும் என்று ஒருபோதும் சொல்லமாட்டார்கள். அவர்கள் பாபாவையே தெரிந்திருக்கவில்லை. இந்த சாதுக்கள் போன்றவர்களையும் கூட நான் வந்து முன்னேற்றுகின்றேன் என்று கீதையில் பாபா கூறியுள்ளார்.

ஆரம்பத்திலிருந்து இப்போது வரை எந்த ஆத்மாக்கள் எல்லாம் நடிப்பை நடித்துக் கொண்டிருக் கின்றனவோ, அவை அனைத்திற்கும் இது கடைசி பிறவி என்று பாபா புரிய வைக்கின்றார். இவருக்கும் கூட இது கடைசி பிறவியாகும். இவர் தான் பிரம்மாவாக ஆகின்றார். சிறிய வயதில் கிராமத்து சிறுவனாக இருந்தார். இவர் ஆரம்பம் முதல் கடைசி வரை 84 பிறவிகளை முடித்திருக் கின்றார். இப்போது குழந்தைகளாகிய உங்களுடைய புத்தியின் பூட்டு திறந்திருக்கிறது. இப்போது புத்திவான்களாகியுள்ளீர்கள். முன்னால் புத்தியில்லாதவர்களாக இருந்தீர்கள். இந்த லஷ்மி - நாராயணன் புத்திவான்களாவர். தூய்மையற்றவர்களைத் தான் புத்தியில்லாதவர்கள் என்று

சொல்லப்படுகிறது. முக்கியமானது தூய்மையாகும். மாயை எங்களை விழ வைத்து விட்டது என்று கடிதம் கூட எழுதுகிறார்கள். கண்கள் குற்றமுள்ளதாக ஆகிவிட்டது. குழந்தைகளே, ஒருபோதும் மாயையிடம் தோல்வியடையக் கூடாது என்று பாபா அடிக்கடி எச்சரித்துக் கொண்டே இருக்கின்றார். இப்போது வீட்டிற்குச் செல்ல வேண்டும். தங்களை ஆத்மா என்று புரிந்து பாபாவை நினைவு செய்யுங்கள். இந்த பழைய உலகம் முடிந்தே விட்டது. நாம் தூய்மையாக ஆகின்றோம் என்றால் நமக்கு தூய்மையான உலகமும் வேண்டும் அல்லவா. குழந்தைகளாகிய நீங்கள் தான் தூய்மையற்ற நிலையிலிருந்து தூய்மையாக ஆக வேண்டும். பாபா (யோகா) நினைவு யாத்திரையில் இருக்க வேண்டியதில்லை பாபா தூய்மையற்றவராக ஆவதில்லை ஆகவே யோகா செய்ய வேண்டிய தில்லை. நான் உங்களுடைய சேவையில் ஆஜராகியுள்ளேன் என்று பாபா கூறுகின்றார். வந்து தூய்மையற்ற எங்களை தூய்மையாக்குங்கள் என்று நீங்கள் தான் வேண்டுகோள் வைத்தீர்கள். நீங்கள் கேட்டுக் கொண்டதன் பேரில் தான் நான் வந்துள்ளேன். உங்களுக்கு மிகவும் சகஜமான வழியைக் கூறுகின்றேன், மன்மனாபவ என்பது மட்டுமேயாகும். பகவானுடைய மகாவாக்கிய மல்லவா. கிருஷ்ணருடைய பெயரை போட்டதின் மூலம் பாபாவை அனைவரும் மறந்து விட்டார்கள். பாபா தான் முதலில், கிருஷ்ணர் இரண்டாவது ஆவார். அவர் பரந்தாமத்திற்கு எஜமானர், இவர் வைகுண்டத்திற்கு எஜமானர் ஆவார். சூட்சுமவதனத்தில் எதுவுமே நடப்பதில்லை. அனை வரிலும் நம்பர் ஒன் கிருஷ்ணர் ஆவார், அவர் மீது அனைவரும் அன்பு செலுத்துகிறார்கள். மற்றவர்கள் அனைவரும் பின்னால் வருகிறார்கள். அனைவரும் சொர்க்கத்திற்கு செல்லவும் முடியாது.

எனவே இனிமையிலும்-இனிமையான குழந்தைகளுக்கு அளவு கடந்த குஷி இருக்க வேண்டும். ஒருபோதும் தூய்மையாக இல்லாத குழந்தைகள் நிறைய பேர் பாபாவிடம் வருகிறார்கள். விகாரத்தில் செல்கிறீர்கள் பிறகு ஏன் பாபாவிடம் வருகிறீர்கள், என்று பாபா புரிய வைக்கின்றார். என்ன செய்வேன், இருக்க முடியவில்லை, என்று கூறுகிறார்கள். ஆனால் எப்போதாவது ஞான அம்பு தைத்து விடாதா என்று இங்கே வருகின்றேன். தாங்கள் அன்றி எங்களை சத்கதி அடையவைக்க யார் இருக்கிறார்கள், ஆகையினால் வந்து அமர்ந்து விடுகின்றேன். மாயை எவ்வளவு பலம் வாய்ந்ததாக இருக்கிறது. பாபா நம்மை தூய்மையற்ற நிலையிலிருந்து தூய்மையான மலர்களாக மாற்றுகின்றார் என்ற நிச்சயமும் இருக்கிறது. ஆனால் என்ன செய்வது இருந்தாலும் உண்மையை சொல்வதின் மூலம் எப்போதாவது மாறி விடுவேன். தங்களின் மூலம் தான் நான் மாறுவேன் என்ற நிச்சயம் எனக்கு இருக்கிறது. பாபாவிற்கு அப்படிப்பட்ட குழந்தைகள் மீது இரக்கம் உண்டாகிறது, இருந்தாலும் அப்படி நடக்கும். எதுவும் புதிதல்ல. பாபா தினம்-தினம் ஸ்ரீமத் கொடுக்கின்றார். சிலர் நடைமுறைப்படுத்துகின்றனர், இதில் பாபா என்ன செய்ய முடியும். ஒருக்கால் இவர்களுடைய நடிப்பே இப்படி இருக்கிறதோ என்று பாபா கூறுகின்றார். அனைவருமே ராஜா-ராணியாக ஆவதில்லையே. இராஜ்யம் ஸ்தாபனை ஆகிக் கொண்டிருக்கிறது. இராஜ்யத்தில் அனைவரும் வேண்டும். இருந்தாலும் தைரியத்தை விடாதீர்கள் குழந்தைகளே, முன்னே செல்ல முடியும், என்று பாபா கூறுகின்றார். நல்லது!

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமான பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் காலை

வணக்கமும் ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1) பாபாவிடம் எப்போதும் உண்மையாக இருக்க வேண்டும். இப்போது ஏதாவது தவறு நடந்து விட்டால் மறைக்கக் கூடாது. கண்கள் ஒருபோதும் குற்றமுடையதாக இருக்கக் கூடாது - அதை பாதுகாப்பாக (தன் வசத்தில்) வைத்துக் கொள்ள வேண்டும்.

2) எல்லையற்ற தந்தை நம்மை தூய்மையற்ற மோசமான நிலையிலிருந்து அழகாகவும், முட்களிலிருந்து மலராகவும் மாற்றிக் கொண்டிருக்கிறார். இப்போது நமக்கு பாபாவின் கை (துணை) கிடைத்திருக்கிறது, அவருடைய உதவியின் மூலம் நாம் விஷ வைத்தரினி நதியை கடந்து விடுவோம்.

வரதானம்: பவர்ஃபுல் பிரேக் மூலம் ஒரு நொடியில் எதிர்மறையானதை நேர்மறையானதாக மாற்றம் செய்யக்கூடிய சுயமாற்றம் செய்பவர் ஆகுக.

எப்பொழுது எதிர்மறையான அல்லது வீணான சங்கல்பம் வருகிறதோ, அப்பொழுது அதனுடைய போக்கு மிகவும் வேகமானதாக இருக்கும். மிகவும் வேகமான சமயத்தில் பவர்ஃபுல் (சக்திசாலியான) பிரேக் போட்டு மாற்றம் செய்யக்கூடிய பயிற்சி தேவை. எப்பொழுது மலை மீது ஏறுகின்றார்களோ, அப்பொழுது முதலில் பிரேக்கை சோதனை செய்கின்றார்கள். தாங்கள் தங்களுடை.ய உயர்ந்த ஸ்திதியை உருவாக்குவதற்காக சங்கல்பங் களை நொடியில் நிறுத்துவதற்கான பயிற்சியை அதிகப் படுத்துங்கள். எப்பொழுது தங்களுடைய சங்கல்பம் மற்றும் சமஸ்காரத்தை ஒரு நொடியில் எதிர் மறையானதில் இருந்து நேர்மறையானதாக மாற்றம் செய்வீர்களோ, அப்பொழுது சுயமாற்றத்தில் இருந்து விஷ்வ மாற்றத்திற்கான காரியம் நிறைவடையும்.

சுலோகன்: தனக்காக மற்றும் அனைத்து ஆத்மாக்களுக்காக சிரேஷ்ட மாற்றத்திற்கான சக்தியை காரியத்தில் கொண்டு வரக்கூடியவர்கள் தான் உண்மையான கர்மயோகி ஆவார்கள்.